கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 28.08.2011

தேனீ இணைய
10வது வருட
22.02 2002- 22.02.201



முதற்பக்கம்
அதிரடி
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
கவிமலர்
தாயகம்
புளொட்
தூ
நெருப்பு
டெலோ நியூஸ்
பி.ஈ.ஓ.ரி.சுவிஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
அறிவுடன்
கிருத்தியம் பெண்ணியம்
புதியபாதை
அலை
பூர்வீகம்
பூந்தளிர்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
ரீவடை
இணையம்
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே யாழ
ுமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்

Asientribune
Lines-Magahzine
The lka academic
Tamil Week sldf
Uthr


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (11)

**11. 'காந்தி தரிசனம்' கிடைத்தது!**



'காந்தி தரிசனத்துக்காக' நான் காத்திருந்த வேளையில், புலி உறுப்பினன் ஒருவன் வந்து என்னை வரும்படி அழைத்தான். என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சம் ஒருபுறம் இருந்தாலும், காந்தியின் பெயரை விரும்பிச் சூடியிருக்கும் ஒருவன், குறைந்த பட்சம் கொஞ்சமாவது இரக்க சுபாவம் உள்ளவனாகத்தான் இருப்பான் என்று எண்ணினேன்.

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில், காந்தியம் பற்றி எதிரும் புதிருமான இரண்டு வியாக்கியானங்களை நான் பார்த்திருந்தேன்.

ஒன்று, புலிகளுக்கும் இந்திய அமைதிப்படையினருக்கும் இடையில் யுத்தம் மூண்ட பின்னர், இந்தியப் படையினரின் செயலை விமர்சிக்கும் முகமாக, யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியும், ஸ்ரான்லி வீதியும் சந்திக்கும் முட்டாசுக்கடைச் சந்தியில் அமைந்திருந்த விவேகானந்தா அச்சகச் சுவரில், பெரிய சிவப்பு எழுத்துகளில் வாசகம் ஒன்று எழுதப்பட்டிருந்தது. அந்த வாசகத்தில் பின்வருமாறு குறிப்பிப்பட்டிருந்தது.

'கோட்சே காந்தியைக் கொன்றான். ஆனால் ராஜீவோ காந்தியத்தையே கொலை செய்துள்ளான்".

அதாவது கோட்சேயை விட, ராஜீவ் மோசமானவர் என்பதுதான் அதன் சாராம்சம். அதற்காகத்தான் பின்னர் புலிகள், ராஜீவை பெண் தற்கொலைக் குண்டுதாரி மூலமாகக் கொலை செய்தார்களோ என்னவோ?

இன்னொன்று, இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில், பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதற்காக, இந்திய இராணுவ உயர் அதிகாரிகள், ஒவ்வொரு பகுதிகளிலும், அந்தந்த ஊர்களில் உள்ள பல்துறைப் பிரமுகர்களைக் கொண்டு, பிரஜைகள் குழுக்களை அமைத்திருந்தனர். அவ்வாறான ஒரு குழுவின் கூட்டமொன்றில் பங்குபற்றும் ஒரு சந்தர்ப்பம், ஒருமுறை எனக்கும் கிடைத்தது.

நான் பல மாதங்களுக்கு ஒருமுறை, எனது சொந்த ஊரான இயக்கச்சிக்கு எனது சகோதரர்கள், உறவினர்கள், ஊரவர்களைப் பார்க்கப் போவது வழமை. அவ்வாறு போன ஒரு சந்தர்ப்பத்தில், சாவகச்சேரியில் நடைபெற்ற, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் கூட்டத்தில், பச்சிலைப்பள்ளி பிரஜைகள் குழுத் தலைவர் திரு.சி.சுந்தரலிங்கம், பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சு.இரத்தினசிங்கம் ஆகியோருடன், நானும் கலந்து கொள்ள வேண்டிய ஒரு சூழல் வந்துவிட்டது.

நான் கலந்து கொள்ள வேண்டிய சூழல் உருவானதற்கான காரணம், எனது ஊரில் எனது மூத்த சகோதரன் உட்பட சிலரை, புலிகளுக்கு உதவினாhகள் என்ற குற்றச்சாட்டில,; இந்திய அமைதிப்படை கைதுசெய்து ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்து வைத்திருந்தது. அவர்களை விடுவிப்பதற்கு இந்தக் கூட்டச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கையிலேயே நான் அதில் கலந்து கொள்ளச் சம்மதித்தேன். (எனது நோக்கம் பின்னர் வெற்றி பெற்றது)

அந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக, அப்போது இலங்கையிலிருந்த இந்திய அமைதிப்படையின் பிரதம தளபதி சந்தோஸ் பாந்தே, தென்மராட்சித் தளபதி கல்யாண்சிங் உட்பட, பல இந்தியப்படை உயரதிகாரிகளும், தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பிரஜைகள் குழ உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தில், சிக்கி பொதுமக்கள் அனுபவிக்கும் கஸ்டங்கள் பிரஜைகள் குழு உறுப்பினர்களால் எடுத்துரைக்கப்பட்டது. பிரச்சினைகளை எடுத்துச் சொன்ன பிரமுகர்கள், (வழமைபோல) புலிகளின் செயற்பாடுகளை ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்திய அமைதிப்படை மீதே எல்லாக் குற்றங்களையும் அடுக்கிக்கொண்டு போயினர். அவர்களுடைய குற்றச்சாட்டுகளையெல்லாம், சந்தோஸ் பாந்தேயும், ஏனைய அதிகாரிகளும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களது பொறுமையை பலவீனமாகவோ என்னவோ கருதிய, பிரஜைகள் முன்னணி சார்பாக அதிகம் கருத்துகளைக் கூறிக் கொண்டிருந்த சாவகச்சேரி புகையிரத நிலைய முன்னாள் அதிபர் திரு, எஸ்.அருணாசலமும், திரு. வீ.இராஜசங்கரியும் (த.வி.கூ தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் சகோதரர்), இந்திய அமைதிப்படை அதிகாரிகளைப் பார்த்து, "காந்தியின் அகிம்சை வழியில் சுதந்திரம் பெற்ற நாட்டைச் சேர்ந்த நீங்கள், இங்கு வந்து காந்தி போதித்த சாத்வீகக் கொள்கைகளுக்கு எதிராக அட்டூழியங்களில் ஈடுபடலாமா?" என ஆவேசமாகக் குரல் எழுப்பினர்.

உரையாடல் சூடு பிடிக்கத் தொடங்கியதும் அமைதி இழந்த சந்தோஸ் பாந்தே, "காந்தி இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில், தனது கொள்கைகளுக்கு எதிரானவர்களைச் சுட்டுப் படுகொலை செய்தாரா? வங்கிகளைக் கொள்ளையடித்தாரா? பாலங்களைத் தகர்த்தாரா? மக்கள் பயணம் செய்யும் பஸ்களையும், ரயில்களையும் தீயிட்டுக் கொளுத்தினாரா?" எனக் கோபத்துடன் சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

ஆவேசமாகப் பேசிய பிரஜைகள் குழுப் பிரமுகர்கள் வாயடைத்துப் போனார்கள். அத்தோடு இந்திய அமைதிப்படை அட்டூழியங்கள் பற்றி மட்டும் கதைத்வர்கள், வாயடைத்து மௌன விரதம் பூண்டுவிட்டனர். கூட்டமும் அமைதியாக முடிந்துவிட்டது. கூட்டம் முடிந்து, நானும் டாக்டர் இரத்தினசிங்கம் அவர்களும், யாழ்நகர் திரும்பும் போது, சாவகச்சேரி நகரில் உள்ள கடையொன்றில், திரு. இராஜசங்கரி வாங்கித் தந்த குளிர்பானத்தை அருந்தி, அவருடன் சிறிது நேரம் உரையாடிவிட்டுச் சென்றோம்.

மறுநாள் காலையில், உள்ள+ர் தினசரியொன்றைப் பார்த்தபோது, இராஜசங்கரி அவர்கள் சாவகச்சேரியிலுள்ள அவரது வீட்டீல் வைத்து, 'இனந்தெரியாதோரால்' சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்த அதிர்ச்சிச் செய்தி முன்பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது. இந்தக் கொலையை, சந்தர்ப்பத்தைப் பாவித்துச் செய்தவர்கள், அகிம்சை தேசத்தவர்களா அல்லது அகிம்சை பற்றி கேள்வி எழுப்பிக் கொண்டு அராஜகம் புரிந்து கொண்டிருந்தவர்களா என்பது தெரியவில்லை.

இதை நான் இங்கு குறிப்பிடுவதன் காரணம், தத்தம் வர்க்கத்துக்கான அரசியல் நலன்கள், அதைக் காப்பதற்கான யுத்தம் என்று வரும்போது, அதுவரை சம்பந்தப்பட்டவர்களால் பெரிதாகப் பேசப்பட்டு வந்த, ஜனநாயகம், மனித உரிமைகள், அகிம்சை என்பனவெல்லாம் திரும்பத் திரும்ப கேலிக்கூத்தாக்கப்பட்டிருப்பதை, வரலாற்றில் நாம் பல தடவைகள் கண்டுள்ளோம் என்பதை எடுத்துரைக்கவே. யுத்தத்தில் ஈடுபட்ட புலிகளும் சரி, இந்திய இராணுவமம் சரி, அகிம்சையைப் பேசிக்கொண்டு, அராஜகத்தையே அரங்கேற்றினர் என்பதை, பின்னர் நடந்த சம்பவங்கள் தெளிவாக நிரூபித்துள்ளன.

இந்தப் பின்னணியில், எமது அகிம்சாமூர்த்தி, மிதித்த இடத்துப் புல் சாகாத சாது, 'காந்தி அம்மானை' சந்திப்பதற்காக,


டன் தொலைக்காட்சி தொடர்புகட்கு
தேனீ இணையத்தளத்தி
தோழர் மணியம் தொட
எழுதும் புலிகளின்
வதைமுகாம் அனுபவங்
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுது அனுபவத்தொடர்
யாழ்ப்பாணத்தில் சாதி அரசியல் செயற்படும் முறை
அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (1 )
அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (2

அழைப்பாணை கொண்டு வந்தவனுடன் புறப்பட்டேன். எமது காந்தி சாது, முன்னைய காலங்களில் முனிவர்கள் அமைத்தது போன்ற வட்ட வடிவமான ஓலைக்குடில் அமைத்து, மேலே வேப்ப மர நிழல் குடை பிடித்திருக்க ஒரு சிம்மாசனம் போன்ற கதிரையில் வீற்றிருந்தார்.

இந்தக் காந்தியின் தோற்றத்தைப் பார்த்ததும், நான் அவன் பற்றி உருவாக்கி வைத்திருந்த பிம்பங்கள் எல்லாம், நொடிப்பொழுதில் தகர்ந்து விழுந்தன. அவனது நெடிதுயர்ந்த உயரம். நீண்ட கரங்கள். பெரிய மீசை. கருமையான புருவங்கள். கட்டுக்கடங்காத சுருள் தலைமயிர். விசமமும் கேலியும் கலந்த பார்வை என்பன, இவன் அந்தக் காந்தியின் கால்தூசுக்கும் பெறுமதியில்லாதவன் என்பதை எடுத்துரைத்தன. அவனது இருக்கை மீது, அவனது தண்டாயுதமாக, நன்கு சீவி உருட்டி எடுத்த மரப் பொல்லு ஒன்று சாத்தி வைக்கப்பட்டிருந்தது. இரண்டு பக்கமும் நாக்கைத் தொங்கவிட்டவாறு, அரைநிலையில் உட்கார்ந்து கொண்டிருந்த இரண்டு பொமனேரியன் நாய்க்குட்டிகளை, அவனது கைகள் இரண்டும் வருடிக் கொண்டிருந்தது. இவ்வாறுதான், அந்தச் சாதுவின் 'பற்றற்ற' கோலம் அமைந்திருந்தது.

நான் காந்திக்கு முன்னே போனதும், என்னை அழைத்து வந்தவன் பின்தங்கிவிட்டான். காந்தி என்னைப் பார்த்து ஒரு விசமச் சிரிப்பை உதிர்த்துவிட்டு,
"மணியத்தார், மணியண்ணை, மணியம் வருக வருக" எனக் கேலியும், கிண்டலுமாக வரவேற்றான்.

"நீங்கள் இங்கு வருவீர்கள் எனக் கனவிலும் எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள், என்ன?" என அடுத்தொரு கேள்வியை வீசினான்.

பின்னர், "உதிலை இருங்கோ" என, தனக்கு முன்னால் போடப்பட்டிருந்த வயர் பின்னலுள்ள நாற்காலிகள் இரண்டில் ஒன்றைச் சுட்டிக்காட்டினான்.

நான் அமர்ந்து கொண்ட பின்னர், எனது சேர்ட் பொக்கற்றுக்குள் திடீரென கையை நுழைத்து, நான் வைத்திருந்த எனது ஆஸ்த்மாவுக்கான மருந்துக் குளிகைகளை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். பின்னர் என்னை நோக்கி, "கடுமையான வருத்தக்காரன் என்று காட்டி, எங்களைச் சுத்துறதுக்கு (இந்தச் சொல், புலிகளின் நாளாந்த வாழ்க்கையில் அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு 'கலைச்சொல'; என்பதை, பின்னைய நாட்களில் தெரிந்து கொண்டேன்) மருந்துக் குளிசையோடை திரியிறியள்" என, ஏதோ ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்துவிட்டதைப் போலச் சொல்லிச் சிரித்தான்.

சில விநாடிகள் அமைதி நிலவியது. காந்தி (நான் இந்தப் பிரகிருதியை, இந்த தொடர் முழுவதும் இந்திய சுதந்திர பிதா மகாத்மா காந்தியின் பெயரைச் சொல்லி அழைக்க வேண்டி இருப்பதற்காக, அவர் என்னை மன்னிப்பாராக) என்னை தலையிலிருந்து கால்வரை கண்களை உருட்டி உருட்டி உன்னிப்பாகப் பார்த்தான். பின்னர் திடீரென என்னை நோக்கி,
"டொக்டர் சிறீதரனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு? அவனுடன் திண்டது, குடித்தது, படுத்தது, ஓ....தது எல்லாவற்றையும் சொல்லிப்போடு. இல்லையெண்டால் நடக்கிறது வேறை" என உறுமினான்.

திடீரென அக்கேள்வியைக் கேட்டதால், எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. எதற்காக அந்தக் கேள்வி இந்த இடத்தில் வந்ததென்றும் விளங்கவில்லை. இருந்தாலும் நான் சமாளித்துக் கொண்டு,
"அவர் எனது நீண்ட நாளைய நண்பர். அதைத் தவிர விசேசமாக ஒண்டும் இல்லை" எனச் சொன்னேன்.

அவ்வளவுதான். என் மீது ஒரு உதை விட்டான். நான் கதிரையுடன் சேர்ந்து தரையில் சரிந்து விழுந்துவிட்டேன். பின்னர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுந்து இருக்க முயற்சிக்கையில், திடீரென அங்கு வைக்கப்பட்டிருந்த கொட்டனால், என்மீது சரமாரியாகத் தாக்கத் தொடங்கினான். அவன் கோபமடையும் போது, நாக்கை பற்களுக்கிடையில் வைத்துக் கடித்துக் கொண்டு, முழிகளை உருட்டிக் கொண்டு உறுமுவது வழக்கம் என்பதை, பின்னர் பல தடவைகளில் கண்டேன்.

என் தலையைத் தவிர உடம்பு முழுவதும் சுமார் மூன்று நிமிடங்கள் வரை தாக்குதல் நடந்தது. (தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்) பின்னர் என்னை நோக்கி, "என்னடா எங்களுக்குச் சுத்தலாம் எண்டு பாக்கிறியா? உன்னைப் போல ஆயிரம் பேரைக் கண்டனாங்கள்" என கர்ச்சித்தான்.

இவன்களிடம் உண்மையைக் கூறியோ, நியாயம் பேசியோ பிரயோசனம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன். அமைதியாக எழுந்து நின்றேன். அவனது தாக்குதலால் உடம்பு முழுவதும் வலி எடுத்தது. மனதுக்குள் அழுதேன்.

ஏனெனில் என் நினைவுக்கு எட்டியவரை, எனது சிறு வயதிலோ அல்லது பின்னரோ எனது தாய் தந்தையரோ அல்லது சகோதரர்களோ, எனக்கு ஒருபோதும் அடித்ததாக ஞாபகம் இல்லை. சில வேளைகளில், சிறு வயதில் நான் செய்த குழப்படிகளுக்காக, ஒரு தடியை எடுத்து வெருட்டியிருக்கக்கூடும். நான் கல்விகற்ற காலத்திலும் கூட, எந்த ஒரு ஆசிரியரிடமும் நான் ஒருபோதும் அடி வாங்கியதில்லை. ஆனால் படிப்பு வாசனையற்ற, (இவர்களில் அநேகரின் நிலை அதுதான்) பண்பாடு என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும், இந்த மிருகங்களின் கையால் அடி வாங்கியது, ஒருபக்கம் மன வேதனையாகவும், இன்னொரு பக்கம் அவமானமாகவும் இருந்தது.

இதற்கு முன்னர், தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களின் போதும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களின் போதும், நான் சில சந்தர்ப்பங்களில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன். ஆனால் அந்த நேரங்களில் எல்லாம், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிசார் என்னிடம் அத்துமீறி நடக்கவில்லை. (பொலிசார் எல்லோருடனும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாகரீகமாகத்தான் நடந்து கொண்டார்கள் எனபது, இதன் அர்த்தமல்ல)

நான் அமைதியாக எழுந்து நின்றேன். அவன் எனக்கு இருக்க ஆசனம் தந்த பொழுது, என்னைச் சிறிதளவாவது கௌரவத்துடன் நடாத்துவான் என எண்ணினேன். ஆனால் முதல் சந்திப்பே கோணலாகிவிட்டது. எனவே இனி முற்றிலும் கோணல் என்பது விளங்கியது.

அவன் எழுந்து நின்று, மீண்டும் அந்தக் கொண்டனால் என்மீது தாக்குதல் நடாத்திவிட்டு, "இண்டைக்கு ஒருநாள் தாறன். அதுக்குளை யோசித்து நீ செய்த குற்றங்கள் எல்லாத்தையும் நீயாகச் சொல்லிப்போடு. இல்லையெண்டால் உன்ரை பொஞ்சாதி பிள்ளை உனக்கு அந்திரிட்டி செய்ய வேண்டி வரும்" என எச்சரித்தான்.

பின்னர் அங்கு நின்ற ஒருதனைக் கூப்பிட்டு, "அவர் என்ன பெரிய துரையா? கொண்டு போய் சங்கிலி போடடா" என உத்தரவிட்டான்.

அவன் என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். எனக்குப் பின்னே காந்தியினதும், வேறு யாரோ இரண்டொருவரினதும் சிரிப்பொலிகள் கேட்டன.

'சங்கிலி போடச் சொல்லி இருக்கிறான். அது என்ன சங்கிலி?' என யோசித்தவாறு அவனுக்குப் பின்னால் நான் போய்க் கொண்டிருந்தேன்.

தொடரும்

முன்னைய பதிவுகள்